**செய்தி வெளியீடு எண் : 178** **நாள் : 26.01.2024**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (26.1.2024) காலை 10.30 மணிக்கு சென்னை வர்த்தக மையத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில் முனைவோருக்கான மாபெரும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கத்தினை (TN- BEAT Expo 2024) தொடங்கி வைத்தார்கள். இந்த கண்காட்சி இன்றும் நாளையும் (ஜனவரி 26, 27) ஆகிய இரண்டு நாட்கள் நடைபெறுகிறது.

இந்த மாபெரும் கண்காட்சியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரால் தயாரிக்கப்பட்ட 8,000-க்கும் மேற்பட்ட பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. 5,000-க்கும் மேற்பட்ட விற்பனைப் பொருள்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இந்த கண்காட்சியில் 410க்கும் மேற்பட்ட காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. 20,000க்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் இந்த கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டு மகிழ்ந்து பாராட்டி வருகின்றனர்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், இது குறித்து சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு**

நாளையும் நடைபெறும் இந்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில் முனைவோருக்கான மாபெரும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கத்தினை வாய்ப்புள்ள அனைவரும் சென்று பார்க்க வேண்டும்.

உங்களது வருகை ஆதி திராவிட - பழங்குடியின மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கு உத்வேகமாக அமையும்!

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in